செ. கு. எண்: 183 நாள்: 24.11.2017

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – 24.11.2017

1. விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டத்தில் உள்ள **சாஸ்தாகோவில் நீர்த்தேக்கத்திலிருந்து** தேவதானம், சேத்தூர், முத்துசாமிபுரம், நல்ல மங்களம் மற்றும் ரெட்டியார்பட்டி கிராமத்தில் உள்ள ஆயக்கட்டு பகுதிகளில் கார் சாகுபடி பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு அப்பகுதி வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, சாஸ்தாகோவில் நீர்த்தேக்கத்திலிருந்து கார் சாகுபடி பாசனத்திற்காக **27.11.2017 முதல் 13.1.2018 வரை** 48 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், விருதுநகர் மாவட்டத்தில் கண்மாய் பாசனம் மூலம் 2679.10 ஏக்கர் நிலங்கள் மற்றும் நேரடிப்பாசனம் மூலம் 451.58 ஏக்கர் நிலங்கள், **ஆக மொத்தம் 3,130.68 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், **பிளவக்கல் பெரியாறு மற்றும் கோவிலாறு அணைகளிலிருந்து** பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பிளவக்கல் பெரியாறு மற்றும் கோவிலாறு அணைகளிலிருந்து **27.11.2017 முதல் 28.2.2018 வரை** அணைகளின் நீர் இருப்பு, நீர் வரத்து மற்றும் நீர்த் தேவை அடிப்படையில் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், விருதுநகர் மாவட்டத்தில் பிளவக்கல் திட்டத்தின் கீழ் உள்ள பூரிப்பாறைக்குளம், சீவனேரி, குணவந்தனேரி, வத்ராப் பெரியகுளம், விராகசமுத்திரம் ஆகிய 5 கண்மாய்களின் மூலம் 528.77 ஏக்கர் நிலங்களும், நேரடி பாசன கால்வாய் மூலம் 430.76 ஏக்கர் நிலங்களும், **ஆக மொத்தம் 959.53 ஏக்கர் நிலங்கள்** பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**

தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**